# அரையாண்டுத் தேர்வு - 2022

Reg. No. | | | | | | |

நேரம் : 3.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள் : 90

### பகுதி – I

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். ஆ) தேர்ந்தெடுத்த விடைக்கு குறியீட்டுடன் விடையினையும் எழுதவும்.** **14 x 1 = 14**

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல் அ) மஸ்னவி ஆ) நிலவுப்பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம்
2. தமிழில் திணைப் பாகுபாடு.........அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு
3. வெள்ளச் சமவெளிகள் அழியக்காரணம்
   அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்
4. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுதீன் ரூமி குறிப்பிடுவது
   அ) வக்கிரம் ஆ ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
5. கடலின் பெரியது அ) உற்றகாலத்தில் செய்த உதவி ஆ) பயன் அறியாமல் ஒருவர் செய்த உதவி இ) திணையளவு செய்த உதவி ஈ) தானே முன் வந்து செய்த உதவி
6. வெண்டளை..............வகைப்படும். அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
7. 'குழி மாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்? அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
8. Arrival – என்ற ஆங்கிலச்சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொல்லை எழுதுக.
   அ) புறப்பாடு ஆ) வருகை இ) அடைதல் ஈ) முடிதல்
9. படிமம் என்பதன் பொருள்............அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி
10. பூம்பாவாய் – என்ற சொல்லின் புணர்ச்சி விதி
    அ) ஈறுபோதல் ஆ) அடி அகரம் ஐ ஆதல் இ) இனமெய்மை தோன்றல் ஈ) ஆதிநீடல்
11. 'உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்' – இத்தொடர் உணர்த்தும் பண்பு
    அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு இ) முரண் பண்பு ஈ ) இவை அனைத்தும்
12. வேறுபட்டதைக் குறிப்பிடுக. அ) அண்மைக் காட்சி ஆ) சேய்மைக் காட்சி இ) நடுக்காட்சி ஈ) காட்சி மறைவு
13. 'பலர் துஞ்சவும் தாம் துஞ்சான்' – விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
    அ) சோழன் நெடுங்கிள்ளியை, பரணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்
    இ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்
14. அதியமான்.......மலையில் இருந்து பறித்துவந்த நெல்லிக்கனியையே ஔவைக்குக் கொடுத்தார்.
    அ) பழனி ஆ) பொதினி இ) பூரிக்கல் ஈ) ஊட்டி

### பகுதி – II பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** **3 x 2 = 6**

15. நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது – விளக்கம் தருக.
16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
17. கலிவிழா, ஒலிவிழா – விளக்கம் தருக.
18. அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக** **2 x 2 = 4**

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. அக்காலத்துக் கல்விமுறையில் மனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?
21. 'தமிழர்வளர்த்த அழகுக்கலை' – நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு – 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்குசு விடை தருக** **7 x 2 = 14**

22. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக. அ) முன்னுடை ஆ ) உரனுடை
23. பாடாண்திணை விளக்குக.
24. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ ) நகை ஆ) செய்த
25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
    ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.
26. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக. அ) குதிரை, வேகம், ஓடு, தாவு
27. அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.
    அ) முருகன்........(வேகம்) சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
28. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் எழுதுக. அ) கலை ஆ) களை
29. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம். (சூடாமணி, தமிழ்ஒளி, அம்பை, புதுமைபித்தன்)
    அ) தாய்மொழி ; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். ஆ) சிறுகதை ஆசிரியர் ; முதல் பாதி நவீனம்.
30. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக. அ) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

## பகுதி – III பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக** 2 x 4 = 8

31. "ஏங்கொலிநீர் ஞாலத்துஇருளகற்றும்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
32. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?
33. எவற்றையெல்லாம்விட நன்றி உயர்ந்தது? குறள்வழி விளக்குக.
34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2 x 4 = 8

35. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.
36. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
37. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்னும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
38. மயிலை சீனி, வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

### பிரிவு – 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 x 4 = 12

39. எடுத்துக்காட்டு உவமை அணியை விளக்குக. கீழ்க்காணும் குறளுடன் பொருத்துக.
துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.
40. வாகைத் திணையை விளக்குக. **(அல்லது)** செவியறிவுறூஉ துறையை விளக்குக.
41. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக்கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் நான்கனை எடுத்தெழுதுக.

முச்சங்கங் கூட்டி
    முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
    அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
    சுவை மிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
    அமைத்த பெருமாட்டி
            – கண்ணதாசன்

42. **தமிழாக்கம் தருக.**
அ) If you want people to understand you, speak their language.
ஆ) A picture is worth a thousand words.
இ) Work while you work and play while you play.
ஈ) Culture does not make people, people make culture.

(செவி மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மட்டும் வினா எண்–42 க்குப் பதிலாக வினா வழங்கப்பட்டுள்ளது)
கீழ்க்காணும் பத்தியைப் படித்துணர்ந்து வினாக்களுக்கு விடை தருக.

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்றதாயின் முதல் வேட்கை தன் குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும்.

**வினாக்கள் :** அ) குழந்தையின் மனவளர்ச்சி எதனுடன் தொடர்புடையது? ஆ) மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும்.......ஆகும். இ) தாயின் முதல் வேட்கையாக இருப்பது என்ன? ஈ) மொழி எவ்வாறு வளர்ச்சி பெறும்?

43. பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.
அ) பசுமரத்தாணி போல **(அல்லது)** கடல்–பற்றிய கவிதை எழுதுக.

## பகுதி – 4

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3 x 6 = 18

44. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகிய கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. **(அல்லது)**
நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து – என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமை தாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
45. உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் ஒன்றிணைந்து வாழ்வில் உயர்ந்தனர் என்பதுபோல் கற்பனை கதையொன்று எழுதுக.
**(அல்லது)** கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.
46. மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக. **(அல்லது)**
கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக. **(அல்லது)**
திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் நிறுவுக.

## பகுதி – 5

47. **அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** 4 + 2 = 6
அ) 'பாதகர்' எனத் தொடங்கும் இரட்சண்ய யாத்ரிகம் பாடல். ஆ) 'புகின்' – என முடியும் குறள்